TAMIL / TAMIL

உண்மைகளை பெறுங்கள்:

# குழந்தைகளுக்கு COVID-19 தடுப்பூசி போடுதல்





**5 முதல் 11 வயது வரையான குழந்தைகளுக்கு COVID-19 தடுப்பூசியை கனடாவின் சுகாதாரம் அங்கீகரித்துள்ளது. தடுப்பூசியானது உங்கள் உடல் வைரஸை எதிர்த்து போராட உதவுகிறது, இதனால் குழந்தைகள் COVID-19 -ஐ பெறுவதற்கான மற்றும் அதன் அறிகுறிகளை அனுபவிக்கும் வாய்ப்புகளும் குறையும்.**

**குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் COVID-19 நோயால் உண்மையில் நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு** என்றாலும் அவர்கள் மேலும்:

- COVID-19 மூலம் பாதிக்கப்படலாம்
- தொற்றுக்குள்ளாகலாம் மற்றும் எந்த அறிகுறிகளும் இல்லாதிருக்கலாம்
- குழந்தைகளில் பல அமைப்பு அழற்சி நோய்க்குறி (MIS-C) எனப்படும் அரிதான ஆனால் தீவிரமான சிக்கலைப் பெறலாம்.
- மற்றவர்களுக்கு COVID-19 -ஐ பரப்பலாம்
- நோய்த்தொற்று ஏற்பட்டால் நீண்ட கால விளைவுகளை அனுபவிக்கலாம்

சோர்வு, தலைவலி, எடை இழப்பு, தசைவலி, தூக்கக் கலக்கம், இருமல் மற்றும் சிந்தனை அல்லது கவனம் செலுத்துவதில் சிரமம் ஆகியவை COVID-19 -இன் மிகவும் பொதுவான நீண்ட கால விளைவுகளாகும்.

சில அடிப்படை மருத்துவ நிலைமைகளைக் கொண்ட குழந்தைகள் COVID-19 -இலிருந்து கடுமையான நோய்க்கான அதிக ஆபத்தில் இருக்கலாம், ஆனால் கடுமையாக நோய்வாய்ப்பட்ட சில குழந்தைகளுக்கு ஆபத்து காரணிகள் இல்லை.

தடுப்பூசி வைரஸுக்கு எதிராக கூடுதல் பாதுகாப்பை வழங்குகிறது, மேலும் நேரில் கற்றல், விளையாட்டு மற்றும் சமூக நிகழ்வுகள் போன்ற முக்கியமான செயல்களில் குழந்தைகள் மிகவும் பாதுகாப்பாக பங்கேற்க உதவுகிறது.

## நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது



**தடுப்பூசிகளை உருவாக்கும் மற்றும் மதிப்பாய்வு செய்யும் போது விஞ்ஞானிகள் கவனமாக நடைமுறைகளை பின்பற்றினர்.** அர்ப்பணிப்புள்ள ஆராய்ச்சி நிதி மற்றும் நம்ப முடியாத அளவிலான சர்வதேச ஒத்துழைப்பின் காரணமாக தடுப்பூசிகள் விரைவாக கிடைத்தன. தடுப்பூசிகள் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை அடிப்படையாக கொண்டவை. அவை பிற தொற்று நோய்களுக்காக பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன.

**5 முதல் 11 வயது வரையான குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் ஒரு சிறிய அளவு டோஸ்தான்.** மற்ற பல தடுப்பூசிகளைப் போலவே COVID-19 தடுப்பூசியின் அளவும் ஒரு நபரின் வயதை அடிப்படையாக கொண்டது. எடை அல்லது அளவைப் பொறுத்து அல்ல. ஏனெனில் நமது நோயெதிர்ப்பு அமைப்புகளின் பொறுப்புணர்வுக்கு வயது முக்கிய காரணியாகும். இந்த தடுப்பூசிகள் பற்றிய ஆய்வில் சிறிய அளவு, குழந்தைகளுக்கு COVID-19 -க்கு எதிராக மிகச் சிறந்த பாதுகாப்பை வழங்கியது.

**தடுப்பூசிகள் உங்கள் குழந்தைக்கு COVID-19 -ஐ கொடுக்க முடியாது**, ஏனெனில் இந்த நோயை ஏற்படுத்தும் அந்த வைரஸ் அவற்றில் இல்லை.

**தடுப்பூசிகளால் மரபணுக்களை மாற்ற முடியாது.** தடுப்பூசிகள் ஒருபோதும் மரபணுக்களுடன் தொடர்பு கொள்ளாது.

**தடுப்பூசிகள் உங்கள் குழந்தையின் கருத்தரிக்கும் செயலை பாதிக்காது.** COVID-19 தடுப்பூசிகள் கருவுறுதலை பாதிக்கும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று பல தனிப்பட்ட ஆய்வுகள் காட்டுகின்றன.

## பக்க விளைவுகள்



தடுப்பூசிக்கான எதிர்வினைகள் பொதுவாக இலகுவானவை மற்றும் சில மணி நேரங்கள் அல்லது நாட்களுக்குள் தானாகவே போய்விடும். உட்செலுத்தப்பட்ட இடத்தில் சிவத்தல், புண் மற்றும் ஊசி போட்ட இடத்தில் வீக்கம் மற்றும் குளிர், இலேசான காய்ச்சல், சோர்வு, தலைவலி, மூட்டுவலி மற்றும் தசைவலி போன்ற பொதுவான அறிகுறிகளும் இதில் அடங்கும்.

கடுமையான ஒவ்வாமை எதிர்வினைகள் மிகவும் அரிதானவை மற்றும் சிகிச்சையளிக்கக் கூடியவை. அவை ஏற்பட்டால், அது பொதுவாக தடுப்பூசி பெற்ற சிறிது சிறிது நேரம் மட்டுமே இருக்கும்.

**தடுப்பூசிகள் பாதுகாப்பு மற்றும் பக்க விளைவுகளுக்காக கண்காணிக்கப்படுகின்றன.**

எங்களின் வலுவான COVID-19 தடுப்பூசி பாதுகாப்பு கண்காணிப்பு அமைப்புடன் கனடாவில் குழந்தைகளுக்கான தடுப்பூசிகளுக்கான பாதுகாப்பு கண்காணிப்பு அமைப்பு உள்ளது. நோய்த்தடுப்பு கண்காணிப்பு திட்டம் ACTive (The Immunization Monitoring Program ACTive (IMPACT)) வலையமைப்பு என்பது குழந்தை மருத்துவம் , மருத்துவமனை சார்ந்த வலையமைப்பு ஆகும். இது கனேடிய குழந்தை மருத்துவ சங்கத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இது 20 ஆண்டுகளுக்கும் மேலாக குழந்தை பருவ நோய்த்தடுப்புகளை கண்காணித்து வருகிறது.

**COVID-19 தடுப்பூசிகள் குறித்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், சுகாதார பாதுகாப்பு வழங்குநரிடம் பேசவும்.**

உண்மைகளைப் பெறுங்கள். Canada.ca/covid-vaccine -இல் மேலும் அறிக மற்றும் நீங்கள் வசிக்கும் இடம் குறித்த தகவலுக்கு உங்கள் மாகாண அல்லது பிராந்திய இணைய தளத்தை பார்வையிடவும்.

ID 04-50 / DATE 2022.01.20